# மட்டக்களப்பு வரலாற்றில் நாகர்

Ms.Punniyamoorthy Gowry, *Lecturer (Prob)*, Department of History, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka

## 1.0 அறிமுகம்:

இலங்கையின் வட கிழக்குப் பகுதிகள் நாட்டின் ஏனைய பகுதிகளைப் போல தனித்துவமான வரலாற்றைக் கொண்டவையாக வளர்ச்சியடைந்து வந்தமைக்குச் சமகாலத்தில் கிடைக்கின்ற வரலாற்று மூலாதாரங்கள் சான்றாக அமைகின்றன. இலங்கையின் பூர்வீக குடிகளாக இயக்கர், நாகர் வாழ்ந்தமைக்கு மகாவம்சம் முதலான பாளி இலக்கியங்களும், பிராமிச் சாசனங்கள் முதலான தொல்லியற் சான்றுகளும் ஆதாரங்களாக அமைகின்றன. மட்டக்களப்புத் தேசத்தைப் பொறுத்தவரையில் இக்குடிகள் பற்றிய ஆய்வுகள் முக்கியத்துவமுடையதாக அமைகின்றது. நாகர்களது செல்வாக்கு பொதுவாக வட இலங்கையை மையப்படுத்தியதாகவே அமைந்திருந்தது என ஆரம்ப காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் வெளிப்படுத்தின. ஆயினும் கிழக்கில் நாகர் வாழ்ந்தமைக்கான சான்றுகள் பல அண்மைக் காலம் வரை கண்டறியப்பட்டு வருகின்றமை அவர்கள் பற்றிய ஆய்வை ஆழப்படுத்துவதற்கான சூழலை உருவாக்கியுள்ளன.

‘நாக’ என்ற சொற்பிரயோகம் தொலமியினுடைய ஜியோகிறோபியா (நாக தீபோய்), சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான தமிழிலக்கியங்கள் முதலானவற்றிலும் காணப்படுகின்றது. அதேபோன்று நாட்டின் பல பாகங்களிலும் கண்டறியப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்களில் ஏறத்தாழ 90 இல் நாகர்களுடன் தொடர்புடைய ஆட்பெயர்கள், இடப்பெயர்கள் என்பனவும் காணப்படுகின்றன. கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திற்குரியதான இக்கல்வெட்டுக்கள் இலங்கைக்கும் நாகருக்குமிடையிலான தொடர்புகளை வெளிப்படுத்துகின்றது. பேராசிரியர் பரணவிதான ஆரம்பத்தில் இயக்கர், நாகர் என்போர் மனிதப்பிறவியற்ற அமானுஸ்யர்கள் எனக் கருதினார். வட இந்தியாவிலிருந்து வந்த விஜயனின் வழிவந்தவர்களாகக் கருதப்படும் சிங்களவர்களே இலங்கையின் பூர்வீக குடிகள் எனக் காட்டும் முயற்சியாகவே அவர் இத்தகைய கருத்தை முன்வைத்தார். ஆயினும் வட இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் நாகரை மனிதர்களாக அடையாளங் காட்டின.

‘நாக’ என்ற பெயர் ஆதி காலம் தொடக்கம் வழக்கிலிருந்து வருவதற்கு பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்பட்டாலும், சமய வழிபாட்டில் நாக பாம்பை குல மரபுச் சின்னமாகக் கொண்டிருந்ததே காரணம் என்ற விளக்கமே முக்கியத்துவமுடையதாகும். இப்பெயர் ஆதிகால இலங்கையில் பல இன, பல மொழி பேசும் மக்களோடு தொடர்புடைய ஆட்பெயராகவும், குலப் பெயராகவும் இருந்ததற்கு பொருத்தமான சான்றுகள் காணப்படுகின்றன. ஏனைய இன மக்களிடம் இப்பெயர் மறைந்து போய்விட்டதாயினும், தமிழரிடையே இன்றுவரை நிலைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.[1]இலங்கையின் வரலாற்று இலக்கியங்களுள் ஒன்றான மகாவம்சம் கி.மு ஆறாம் நூற்றாண்டில் புத்தர் இலங்கை வந்தபோது அனுராதபுரத்திற்கு வடக்கில் அமைந்த பிராந்தியத்தை ‘நாக தீப(ம்)’ எனவும், அங்கு ஆட்சியிலிருந்த இரு நாகவம்சத்து மன்னர்களுக்கிடையிலான சிம்மாசனப் போராட்டத்தைத் தீர்த்து வைத்ததாகவும் கூறுகின்றது.[2]இந்நூலில் புத்தர் இலங்கை வந்ததாகக் கூறுவது ஐதிகமாக இருப்பினும் அந்நூல் எழுதப்பட்டதாகக் கருதப்படும் கி.பி ஆறாம் நூற்றாண்டில் வட இலங்கை நாக தீபம் என அழைக்கப்பட்டதையும், அங்கு நாக வம்சத்து மன்னர்களே ஆட்சி செய்தனர் என்பதையும் இச்செய்தி உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறு நாகர் தொடர்பான செய்திகளை மகாவம்சம் வெளிப்படுத்துகின்றது.

## 2.0 ஆய்வு நோக்கம்:

மட்டக்களப்பின் பூர்வீக குடிகளுள் ஒன்றாக மட்டக்களப்பு பூர்வசரித்திரம் அடையாளங் காட்டும் நாகர் பற்றிய விடயங்களை ஆய்வு செய்வதனூடாக இப்பிராந்தியத்தின் பூர்வ குடிகள் பற்றிய தெளிவினை ஏற்படுத்தல் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

---

[1]பரமுபுஸ்பரட்ணம், (2006), இலங்கைத் தமிழரும் நாக நாட்டு அரச மரபும், நியு செஞ்சூரி புக் ஹவுஸ், ப: 06

[2]Mahavamsa VIII: 54-3

அவற்றுடன் மட்டக்களப்பு சமூகத்தின் தொன்மையை உறுதிப்படுத்தல், கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலேயே இலங்கையில் வாழ்ந்த இம்மக்கள் மட்டக்களப்புப் பிராந்தியத்திலும் வாழ்ந்தனர் என்பதை வெளிப்படுத்தல், நாகருக்கும் தமிழருக்குமான தொடர்பினை தெளிவுபடுத்தல் என்பன இவ்வாய்வின் உபநோக்கங்களாக அமைகின்றன.

## 3.0 ஆய்வுப் பரப்பு:

நாகர்கள் இலங்கையின் பூர்வீக குடிகளாதலால் நாட்டின் பல பாகங்களிலும் இவர்கள் தொடர்பான சான்றுகளைக் காணமுடிகின்றது. அந்தவகையில் இவ்வாய்வானது மட்டக்களப்பு தேசத்தை மையப்படுத்தியதாக அமைகின்றது. இங்கு நாம் மட்டக்களப்பு தேசம் எனக் குறிப்பிடுவது வடக்கே வெருகல் முதல் குமுக்கன் ஓயா வரையான பரப்பாகும். இது சுமார் 130 மைல் நீளங்கொண்ட நிலப்பகுதியாகும். 1962 ஆம் ஆண்டு இப்பிராந்தியம் மட்டக்களப்பு, அம்பாறை எனும் இரு நிர்வாக மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விரு பகுதிகளையும் உள்ளடக்கியதாகவே ஆய்வுப் பரப்பு அமைகின்றது.

## 4.0 ஆய்வு மூலங்கள்:

இவ்வாய்விற்கான முதன்நிலைத் தரவுகளாக மட்டக்களப்பு தேசத்தில் 1970 களில் பேராசிரியர் எஸ். பரணவிதான அவர்களால் கண்டறியப்பட்டு Inscription of Ceylon என்னும் நூலில் வெளியிடப்பட்ட 160 பிராமிக் கல்வெட்டுக்களுடன், அண்மைய ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ள 10 பிராமிக் கல்வெட்டுக்களும்,மகாவம்சம் முதலான பாளி இலக்கியங்கள்,மட்டக்களப்பு பூர்வசரித்திரம்,மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலான தமிழிக்கியங்கள், தொல்லியல் மேலாய்வுகளில் கிடைத்த சான்றுகள் என்பன அமைகின்றன. இவைதவிர இவ்வாய்வுடன் தொடர்புடைய முன்னைய ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் என்பன மூலம் கிடைக்கும் தகவல்கள் இரண்டாம் நிலைத் தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 5.0 ஆய்வின் அணுகுமுறை:

மட்டக்களப்பு தேசத்தில் அடையாளங் காணப்பட்டு வெளியிடப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்களின் படிகள், நிழற்படங்கள் என்பவற்றை மூலமாகக் கொண்டு அவற்றினை ஆய்விற்குட்படுத்துவதுடன், தெளிவற்றதும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கருதப்படுகின்ற பெருமளவிலான கல்வெட்டுக்கள் நேரடியான களவாய்விற்கு உட்படுத்தப்பட்டு, பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் பெறப்படவுள்ளன. அத்துடன் இவ்வாய்வுடன் தொடர்புடைய முன்னைய ஆய்வுகளுடன் ஒப்பிட்டு கருத்தைச் சீரமைக்கின்ற ஒப்பீட்டாய்வு அணுகுமுறையும் பயன்படுத்தப்படுகின்றது. இக்கல்வெட்டுக்கள் ஊடாக தெரியவரும் வரலாற்று உண்மைகளை சமகால இலங்கை வரலாறு கூறும் பாளி இலக்கியங்கள், தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்கள்,மட்டக்களப்பு பூர்வசரித்திரம், பிற தொல்லியல் ஆதாரங்கள் என்பவற்றுடன் ஒப்பிட்டு உண்மைகளைக் கண்டறிவது எமது ஆய்வு நெறிமுறையாகும்.

## 6.0 பிராமிக் கல்வெட்டுக்களில் நாகர்

தென்னாசியாவில் கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி நான்காம் நூற்றாண்டு வரை பிராமிக் கல்வெட்டுக்கள்புழக்கத்திலிருந்தன. இலங்கையில் இதுவரை இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவ்வளவு எண்ணிக்கையுடைய கல்வெட்டுக்கள் இலங்கையைத் தவிர தென்னாசியாவில் வேறு எந்த நாட்டிலும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

இக்கல்வெட்டுக்கள் பிராமி எனப்படும் வரிவடிவத்தில் பிராகிருத மொழியில் பௌத்த துறவிகளுக்கு அல்லது பௌத்த சங்கத்திற்கு அனைத்து பிரிவு மக்களும் நன்கொடையாக வழங்கிய குகை, கற்படுக்கை, நிலம், குளம், கால்வாய், தானியம் தொடர்பான செய்திகளைக் கூறுகின்றன. அவ்வாறு நன்கொடை வழங்கியவர்கள் தாம் பொறிப்பித்த கல்வெட்டுக்களில் தமது பெயர், பட்டம், பதவி, தொழில், குடும்பம், வம்சம், சமயம், தமது ஊர்ப்பெயர் என்பவற்றையும் குறிப்பிடத் தவறவில்லை. மட்டக்களப்பு, அம்பாறை ஆகியஇரு மாவட்டங்களிலும் கண்டறியப்பட்ட 160 கல்வெட்டுக்களை பேராசிரியர் செ.பரணவிதான வெளியிட்டுள்ளார். இவற்றுடன் அண்மைய ஆய்வுகளில் ஏறத்தாழ 10 கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டுள்ளன.

### 6.1 ஆட்சியாளர்

கி.மு மூன்றாம் நூற்றாண்டிலிருந்து அனுராதபுரம் பலம் மிக்க அரசியல் மையமாக விளங்கிய போதும் அதற்கு தெற்கிலும், வடக்கிலும் இனக்குழு நிலையிலிருந்து அரசு தோன்றுவதற்கு இடைக்கட்டமாக குருசில்கள், நிலக்குழுத் தலைவர்கள், குறுநில மன்னர்கள், சிற்றரசர் என்போரது ஆட்சி நடைபெற்றதை சமகாலப் பாளி இலக்கியங்கள், பிராமிக் கல்வெட்டுக்கள், நாணயங்கள் என்பன உறுதிப்படுத்துகின்றன.[3]மட்டக்களப்பிலும் அத்தகைய குறுநில ஆட்சி நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று கல்வெட்டுக்களிலும் அம்பாறையில் ஐந்து கல்வெட்டுக்களிலும் நாகர் பற்றிய செய்தி காணப்படுகினறது. அதில் இரு மாவட்டங்களிலும் உள்ள ஒவ்வொரு கல்வெட்டில் நாக அரசர் பற்றிய செய்தி காணப்படுகின்றது.

குசலான்மலையிலுள்ள கல்வெட்டொன்றில் (I.C 389) உபராஜ நாகவினுடைய மகனான ராஜ அபயவினுடைய மகன் க₃மனி திஸவினால் சுத₃ஸன என்னும் குகை சங்கத்தாருக்கு தானம் வழங்கப்பட்ட செய்தி பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதேபோன்று அம்பாறை மொட்டயகல்லு எனுமிடத்திலுள்ள கல்வெட்டில்‘தசபதி கரண சககணய உபரஜநக’(I.C487) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[4] அதாவது இதில் உபராஜ நாகவினால் பிக்கு சங்கத்திற்கு வழங்கப்பட்ட தானம் பற்றிய செய்தி காணப்படுகின்றது. இக்கல்வெட்டுக்கள் கதிர்காமச் சத்திரிய வம்சத்தவரான பத்துச் சகோதரர்களின் சந்ததியினரால் வெளியிடப்பட்டவையாகும்.[5] இவ்வம்சத்தின் இளையவன் உபராஜ நாக என்ற பெயரைச் சூடியிருந்தமையை இக்கல்வெட்டு வெளிப்படுத்துகின்றது.

பரணவிதான இதனை பத்துச் சகோதரர்களுள் ஒருவனான யாவகத் தலைவனான உபராஜ நாக எனப் பொருள் கொள்ள குணவர்த்தன இதனை கதிர்காமச் சத்திரியர்கள் என அடையாளங் காண்கின்றார். அத்துடன் அவ்வாறு குறிப்பிடப்படுபவன் தேவநம்பிய தீஸனின் தம்பியாகிய மகாநாக என்ற கருத்தும் காணப்படுகின்றது. ஆயினும் தீஸனின் தம்பியாகிய உபராஜ மகா நாகதிஸமகாராமவில் மட்டும் அரசோச்ச, கதிர்காமச் சத்திரியர்களின் இளைய சகோதரனான மகா நாகவின் ஆட்சி மட்டக்களப்பு, அம்பாறையிலும் பரவியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மகாவம்சம் முதலான பாளி இலக்கியங்கள் முற்காலத்தில் அனுராதபுர இராசதானியினுடைய மேலாதிக்கம் முழு நாட்டிலும் பரவியிருந்தது என்ற எண்ணத்தை தோற்றுவிக்கத்தக்கதாக விடயங்களை குறிப்பிட்டுள்ள போதிலும், சமகாலம் பற்றி அறிவதற்கு நம்பத்தகுந்த ஆதாரங்களாக உள்ள பிராமிச் சாசனங்கள் அதற்கு மாறான கருத்தை வழுப்படுத்துகின்றன. அதாவது அனுராதபுர இராசதானி நிலைபெற்றிருந்த காலத்திலேயே நாட்டின் பல பாகங்களிலும் பல்வேறு சிற்றரசுகள் காணப்பட்டன என்பதை அவை வெளிப்படுத்துகின்றன. இப்பின்னணியில் பாளி இலக்கியங்களை ஆழமான ஆய்விற்குட்படுத்துகின்ற போது பல்வேறு சந்தர்ப்பங்களில் குறுநில அரசு பற்றிய செய்திகளைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. உதாரணமாக துட்டகைமுனுவின் எல்லாளனுக்கு எதிரான படைபெடுப்பு பற்றிக் குறிப்பிடுகின்றபோது, தென்பகுதியில் 32 தமிழரசர்களை வெற்றிகொண்டதாக அவனது சிறப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வேள் என்னும் குறுநில அரசுகள் பற்றிய செய்திகளும் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு தேசத்தில் கிடைத்துள்ள இவ்விரு கல்வெட்டுக்களின் மூலம் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலேயே இப்பகுதியானது நாகர்களால் ஆட்சி செய்யப்பட்ட பிராந்தியமாக இருந்தது என்பது தெளிவுபெறுகின்றது.

### 6.2 சங்கத்தார்:

இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் சங்கத்தார், உபாசகர் எனும் பௌத்த சமயத்தைப் பின்பற்றுகின்ற துறவிகள், பக்தர்கள் பற்றிக் கூறுகின்றது. அந்தவகையில் பௌத்த சமயத் துறவிகளும் நாக என்ற பெயருடையோராக இருந்துள்ளமைக்குப் பிராமிக் கல்வெட்டுக்கள் சிறந்த சான்றாகும். அக்காலத்தில் பல்வேறு இனக்குழுக்களைச் சேர்ந்தவர்களும் பௌத்த சமயத்திற்கு ஆதரவு வழங்கியமையை பிராமிக் கல்வெட்டுக்கள் வெளிப்படுத்துகின்றன. இதனடிப்படையில் ரஜகலவிலுள்ள கல்வெட்டொன்றில் (I.C451) நாக சேன தேரவினுடைய குகையான சுதஸன என்பது

---

[3]பரமுபுஸ்பரட்ணம், (2006), இலங்கைத் தமிழரும் நாக நாட்டு அரச மரபும், நியு செஞ்சூரி புக் ஹவுஸ்

[4] paranawithana.S., (1970),Inscription of Ceylon, vol-01, Colombo

[5]சிற்றம்பலம்.சி.க., (1996),ஈழத்து இந்து சமய வரலாறு, யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு ப: 107

பெயரிடப்பட்டுள்ளது. மற்றொன்றில் (I.C458) ‘நாக தேரஹ லெணே ஈத₃ஸால கோ₃ஹ’ என வருகின்றது. இதில் நாக தேரவினுடைய ஈதஸால என்னும் பெயருடைய குகை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நாக என்பது ஒரு இனப்பிரிவாக அமையாது, நாக வழிபாட்டின் வெளிப்பாட்டைக் காட்டுவதாகவே கொள்ள முடிவதாக பேராசிரியர் சிற்றம்பலம் கருதுகின்றார். அதாவது முற்காலத்தில் நாக வழிபாட்டைப் பின்பற்றியோர் பிற்காலத்தில் பௌத்த சமயத்தின் செல்வாக்கால் அதனைத் தழுவிக் கொண்டனர். இருப்பினும் அவர்களது முன்னோர் வழியாக வந்த நாக என்ற பெயர் அவர்களது பெயர்களோடு இணைந்து வருகின்றது.இது ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவே அமைகின்றது.

### 6.3 சமூகத் தலைமையாளர் (பருமக)

‘பருமக’ எனுஞ் சொல் இலங்கையில் கி.பி முதலாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 374 கல்வெட்டுக்களில் பட்டப் பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.[6]தமிழ் நூற்களில் மிகுதியாகக் காணப்படும் பெருமகன் என்ற சொல்லின் மறுவடிவமே இலங்கைப் பிராமிச் சாசனங்களில் வருகின்ற பருமகவாகும்.பருமகள என்பது அதன் பெண்பால் வடிவமாகும். தமிழில் இச்சொல் தலைவன், உயர்ந்தவன், அரசன், பெரிய மகன், மூத்தவன், அண்ணன் என்ற கருத்தைக் கொண்டுள்ளது. இது பல்வேறு சமூகங்களிடையேயும் காணப்பட்ட சொல்லாகும். அதாவது சமூகத் தலைமையாளரைக் குறிப்பதற்காக இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் பரணவிதான இதனைச் சிங்களச் சொல் எனவும் வடமொழியிலுள்ள ‘பிரமுக’ என்பதன் வழிவந்த சொல்லென்றுங் கூறுகின்றார். ஆனால் இவ்வடிவத்தினை ஒலியமைப்பிலும் உருவ அமைப்பிலும் ஆராய்ந்து பார்க்கும் போதும் இவரது கருத்து ஏற்புடையதாகவில்லை.[7] இச்சொல் காணப்படுகின்ற இடங்களை நோக்குகின்ற போது நாட்டினது நிர்வாகத்தின் முதுகெலும்பாக விளங்கிய செல்வச் செழிப்புடைய ஒரு வகுப்பினர் சூடியிருந்த விருது இது எனக் கொள்ளலாம். உள்ளூர் நிர்வாகத்தில் மன்னனுக்கு அடுத்து முக்கியம் பெற்ற வர்க்கத்தினர் பருமகவாவர்.

இத்தகைய பருமக என்ற பட்டத்தைச் சூடிய நாக குலத்தினைச் சேர்ந்த ஒருவனைப் பற்றிய செய்தி அம்பாறை பம்பரகஸ்லாவக் கல்வெட்டில் (I.C507) காணப்படுகின்றது. ‘பருமகப₃த கரக நாக₃ குலஹ ச கோ₃தி மதஹ ச லெணெ’ என வருகின்றது. அதாவது அரசனுடைய அரண்மனையின் சமையற்கூட மேற்பார்வையாளனான பருமக என்ற பட்டத்தைச் சூடிய நாக குலத்தினைச் சேர்ந்தவனுடைய குகை எனப்படுகின்றது. எனவே நாகர் எனும் பிரிவினர் உள்ளூர் நிர்வாகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தவர்களான பருமக எனும் பதவியையும் வகித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேநேரம் நாக குல என வந்துள்ளமையானதுநாகரை ஒரு குழுவாக வாழ்ந்துள்ள தனி இனப் பிரிவினராகக் கொள்ள முடிகின்றது.

### 6.4 கிராமத் தலைமையாளர் (கமிக)

கமிக என்பவர் கிராமத்தின் தலைவராகக் கருதப்படுவார். இதுவொரு பதவிப் பெயராகக் காணப்படுகின்றது. இப்பதவிப்பெயர் நாகருடன் இணைந்தவகையில் குடும்பிகலக் கல்வெட்டில் (I.C500) வருகின்றது. ‘க₃மிக நாக₃ புதே க₃மிக திஸே கரபிதே ஈம லெணெ ஸேநபதி ஜுவய ஸக₃ஸ திணே’ என்பது சாசன வாசகமாகும். கமிக நாகவின் மகன் கமிக திஸவினால் சங்கத்திற்கு வழங்கப்பட்ட குகை பற்றியதே இக்கல்வெட்டுச் செய்தியாகும். பருமகவைப் போன்று நாக என்னும் பெயருடையோர் கமிக முதலான பதவிகளையும் வகித்திருந்தனர். எனினும் தந்தை நாக என அழைக்கப்பட்டபோதிலும் மகன் அத்தகைய பின்னொட்டின்றி குறிப்பிடப்பட்டுள்ளான். எனவே இங்கு நாக என்பது ஒரு குலப் பெயராக வந்துள்ளது எனக் கொள்ள முடியாதுள்ளது. இங்கு பேராசிரியர்சி.க சிற்றம்பலம் அவர்களுடைய கருத்து குறிப்பிடத்தக்கது. இவர் நாகர் எனும் பெயரை ஒரு இனக்குழுவாக நோக்காது நாக வழிபாட்டைப் பின்பற்றியோர் வைத்துக் கொண்ட பெயராகவே கருதுகின்றார். அத்துடன் காலப்போக்கில் இவ்வழிபாட்டைப் பின்பற்றியோர் பௌத்தம், இந்து சமயம் ஆகியவற்றின் செல்வாக்கால் அவர்களுடன் கலப்புற்றதால்

[6]பரமு புஸ்பரட்ணம், பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும், கொழும்புத் தமிழ்ச் சங்கம், 2003. ப. 18

[7]சிற்றம்பலம்.சி.க (1993), யாழ்ப்பாணம்- தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு

அவர்களது சந்ததியினரின் பெயர்களின் நாக என்ற செல்வாக்குக் குறைவாகக் காணப்படுவதாக அவர் கருத்து தெரிவித்துள்ளார். அக்கருத்து இக்கல்வெட்டிற்குப் பொருத்தமுடையதாகவே அமைகின்றது.

### 6.5 நக பவத

'ப₃த₃த மிதேன மபித நாக₃பவத ஸெனேஸன' (I.C522) என வொம்பரகஸ்தலாவக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. நாகபவத (நாக பப்பத) என்பது நாக பர்வத (நபக மலை) எனும் சொல்லிலிருந்து மருவியிருக்கலாம் என பேராசிரியர் க. சிற்றம்பலம் கருதுகின்றார்.

மேற்கூறியவாறு அரசன், சிற்றரசன், பருமக, கமிக போன்ற நிர்வாகிகள், பௌத்த சமயத் துறவிகள்(தேரர்கள்) போன்றோரும் நாக என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டுள்ளனர்.

| இடம் | பெயர்/ குலம் | பதவி |
|---|---|---|
| குசலான்மலை | நாக | உபராஜ |
| ரஜகல | நாக சேன | தேரர் |
| ரஜகல | நாக | தேரர் |
| மொட்டயகல்லு | நாக | உபராஜ |
| குடும்பிகல | நாக | க₃மிக |
| பம்பரகஸ்தலாவ | நாக (குலம்) | பருமக (சமையற்கூட மேற்பார்வையாளன்) |
| பம்பரகஸ்தலாவ | நாக | க₃மிக |
| வொம்பரகஸ்தலாவ | நாக₃பவத (இடம்) | - |

### 7.0 மட்டக்களப்பு பூர்வசரித்திரம் கூறும் நாகர்

மட்டக்களப்பின் மரபுகள் பற்றிக் காணப்பட்ட பல்வேறு ஏடுகளையும் ஒல்லாந்தர் காலத்தில் மட்டக்களப்பு பூர்வசரித்திரமாகத் தொகுத்தனர். மட்டக்களப்பு பூர்வசரித்திரத்தில் நாகர் பற்றிய செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன. மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது போன்றே இயக்கருடன், நாகரும் இந்நாட்டின் பூர்வ குடிகள் என இந்நூல் குறிப்பிடுகின்றது. கலியாண்டு எண்ணூறில் நாகர் மட்டக்களப்பில் சிறப்பாக வாழ்ந்தனர் எனவும், அக்காலம் முதல் கலியாண்டு 1400 வரை இவர்களே மட்டக்களப்பை ஆண்டதாகவும் கூறப்படுகின்றது.[8] அத்துடன் இயக்கராலும் நாகராலும் மட்டக்களப்பு பிராந்தியமானது 'நாகர் முனை' என அழைக்கப்பட்டது எனவும் இந்நூல் கூறும்.

கூத்திகனது புதல்வன் சேனன்ஆட்சிக்குப் பின் இயக்கர், நாகர் விண்டுஅணையை இராசதானியாக்கி 30 ஆண்டுகள் அரசாண்டனர். அத்துடன் திருக்கோயில், மன்னம்பிட்டி, மண்டூர் என்பன முறையே நாகர்முனை, நாகர்பொக்கனை, நாகன்சாலை என அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பூர்வசரித்திரமானது நாகரின் குலதெய்வம் முருகையன் எனக் குறிப்பிடுகின்றது. நாகர் பற்றிய செய்தியும், நாக வழிபாட்டிற்கான தொல்லியல் சான்றும் கிடைக்கின்ற குசலான்மலையில் ஆதிகாலம் முதலாக இன்றுவரை முருக வழிபாடு நடைபெற்று வருகின்றமைஆய்விற்குரியதாகும்.

பூர்வசரித்திரமானது நாகரை மட்டக்களப்பு பிராந்தியத்தின் பூர்வ குடிகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றது. நெடுங்காலம் அவர்கள் ஆட்சியாளர்களாக நிலைபெற்றிருந்தமை பற்றிய பல்வேறு விடயங்களையும் அது பதிவு செய்கின்றது. இந்நூலை முழுமையான வரலாற்றிலக்கியமாக கொள்ள முடியாதெனினும் அதில் கூறப்படுகின்ற விடயங்கள் சில ஏனைய ஆதாரங்களுடன் ஒப்பிடுகின்ற போது உண்மைத் தன்மை வாய்ந்தவையாகக் கொள்ள முடிகின்றது. அவற்றில் நாகர் பற்றிய செய்தி முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

### 8.0 நாக வழிபாடு

[8]மட்டக்களப்பு பூர்வசரித்திரம், பக்:3-4

பண்டைக் காலத்தில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் வேரூன்றியிருந்த வழிபாடுகளில் நாக வழிபாடும் ஒன்றாகும். தென்னாசியாவில் குறிப்பாக இந்தியா,ஈழம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த தொல் குடியினரான ஒஸ்ரலோயிட் மக்களின் பண்டைய வழிபாட்டு நெறியாக இது விளங்கியது. தனித்துவமான வழிபாட்டு நெறியாகவிருந்து பின்னர் பிற்காலத்தில் வளர்ச்சியடைந்த வழிபாட்டு நெறிகளுடன் கலந்தது. இவ்வாறு தமது வழிபாட்டு நெறியைப் பின்பற்றியோர் நாகமே தம்மை பாதுகாக்கின்றது என்ற சிந்தனையால் தனி இனக்குழுவாக வளர்ச்சியடைந்தனர்.[9]

இலங்கையின் பல பாகங்களிலும் நாக வழிபாடு நடைபெற்றுள்ளமையை பாளி இலக்கியங்களும், தொல்லியற் சான்றுகளும் உறுதிசெய்கின்றன. திருகோணமலையில் கி.பி நான்காம் நூற்றாண்டில் கீர்த்தி சிறீமேகன் காலத்தில் நாக வழிபாடு நடைபெற்றுள்ளமை பற்றி சூளவம்சம் குறிப்பிடுகின்றது. மட்டக்களப்பில் குசலான்மலை, கொத்தியாபுலை, வந்தாறுமூலை ஆகிய இடங்களில் கண்டறியப்பட்டுள்ள நாக சிற்பங்கள் புராதன காலம் முதலாக நாக வழிபாடு நிலவிவந்தமையை காட்டுகின்றது. நாகத்தை வழிபட்ட மக்கள் காலப் போக்கில் அதனை தமது பெயருடன் இணைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு பகுதிகளில் கிடைக்கின்ற பிராமிக் கல்வெட்டுக்களை கொண்டு நோக்குகின்றபோது ஆரம்பத்தில் நாக வழிபாட்டைப் பின்பற்றிய மக்கள் பிற்காலத்தில் பௌத்த, இந்து சமயங்களுக்கு மாறியதை அடையாளங் காணமுடிகின்றது.

## 9.0 நாகரும் தமிழரும்

நாகர் தமிழரோடு நெருங்கிய தொடர்புடையவரடகள் என்பது இலக்கியக் குறிப்புகளினாலும் தொல்பொருட் சின்னங்கள் மூலமாகவும் உணரப்படுகின்றது. அனுராதபுரத்து அரசர்களில் ஒருவனான இளநாக(ன்) என்பது ‘இள’ என்னும் பெயரெச்சமான தமிழ்ச் சொல்லும் நாக என்னும் குலப் பெயர் குறிக்குஞ் சொல்லும் சேர்த்து உருவாக்கப்பட்டதாகும். இவனது மகன் சந்தமுக சிவன் (கி.மு 119- 109) தமிழாதேவி என்பவளை தேவியாக கொண்டிருந்தான் என மகாவம்சம் கூறுகின்றது. நாக அரசன் பற்றிக் குறிப்பிடுகின்ற மொட்டயகல்லு சாசனத்தில் தமிழ் மொழிக்கே உரித்தான சிறப்பெழுத்துக்களுள் ஒன்றான றகரம் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்கள் பொதுவாக பிராகிருத மொழியில் எழுதப்பட்டாலும் தமிழ் மொழிச் செல்வாக்கு அதிகளவிலேயே காணப்படுகின்றது. தென்கிழக்கிலங்கை அக்குறுகொடவிற் கிடைத்த நாணயங்களில் நாகர் பற்றிய செய்திகள் தமிழ் மொழியில் அமைந்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. நாடளாவிய ரீதியில் இத்தகைய சான்றுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. எனவே நாகர் தமிழ் மொழி பற்றிய அறிவுடையோராய் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் தனி இனக்குழுக்களாக இருந்த நாகர் காலப்போக்கில் ஏனைய குழுக்களுடன் கலப்புற்றனர். ஆயினும் நாக என்ற பெயரானது இன்று வரை தமிழரிடையே நிலைபெற்றுள்ளமைக்கு நாகராஜா, நாகமணி, நாகாத்தை,நாகேஸ்வரி, நாகேந்திரன் முதலான பெயர்கள் எம்மிடையே காணப்படுகின்றமை சான்றாகும்.

## 10.0 நாகர் பற்றி அண்மைய ஆய்வுகளில் கண்டறியப்பட்டவை

மட்டக்களப்பு பிராந்தியத்தில் பேராசிரியர்.சி.பத்மநாதன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற பல்வேறு ஆய்வுகளில் நாகர் தொடர்பான தொல்லியற் சின்னங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவை பற்றிய தகவல்கள் இணையத்தளங்களிலும் ஆய்வுக் கட்டுரைகளாகவும் அவரால் வெளியிடப்பட்டன. குடும்பிமலையில் கண்டறியப்பட்ட கல்வெட்டொன்றில் ‘வேள் ண(ந)ாகன் மகன் வேள் கண்ணன்’ என எழுதப்பட்டுள்ளது. இவ்வரிவடிவங்கள் கி.மு மூன்றாம் நூற்றாண்டுக்கு உரியவை. ஈரலக்குளத்திலுள்ள வேரம் எனுமிடத்தில் கிடைத்த கருங்கல்லினாலான நிறைகுடம் போன்ற சிற்றுருவம் ஒன்றில் ‘வேள் கண்ணன் மகன் வேள் ண(ந)ாகன், வேள் ண(ந)ாகன் மகன் வேள் கண்ணன்’ என எழுதப்பட்டுள்ளது.[10]

---

[9]சிற்றம்பலம்.சி.க., (),ஈழத்து இந்து சமய வரலாறு, ப: 95

[10]பத்மநாதன்.சி,(2015),‘‘மட்டக்களப்பில் நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள், மொழிதல், தொகுதி-2: எண்- 01, சுதந்திர ஆய்வு வட்டம், பக்: 17-27

அதேபோன்ற வெல்லாவெளி, வந்தாறுமூலை கிடாக்குழி பிள்ளையாரடி,பாலாமடு, வந்தாறுமூலை பலாச்சோலை வில்லுத் தோட்டம், வந்தாறுமூலை நீர்முகப் பிள்ளையார் கோயில், களுவாஞ்சிக்குடி,ஏறாவூர், குடும்பிமலை முதலான பல்வேறு இடங்களில் உள்ள தொல்லியற் சின்னங்களில் 'ணா(நா)க' எனும் பதத்தைப் பேராசிரியர் கண்டு அவற்றை வெளியிட்டுள்ளார்.

இவை பற்றிய பேராசிரியரின் கருத்துக்கள் மேல்வருமாறு அமைகின்றன. "இற்றைக்கு 2200 வருடங்களுக்கு முற்பட்ட காலத்திலிருந்து மட்டக்களப்புத் தேசத்திலே தமிழ் பேச்சு வழக்கு மொழியாக நிலைபெற்று வந்துள்ளமைக்கு இவை சான்றுகளாகக் காணப்படுகின்றன. தமிழ் மொழி பேசிய நாகர் கி.மு மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலம் முதலாக கிழக்கிலங்கையில் குடியிருப்புகளை ஏற்படுத்தி அவற்றைச் சிற்றரசுகளாக உருவாக்கினர் என்பதும் இதன்மூலம் உறுதி பெறுகின்றது. அத்துடன் சிற்றரசர்களான நாகர் வேள் என்ற பட்டத்தைப் பெற்றிருந்தனர். தமிழகத்துப் பிராமிச் சாசனங்களில் வேள் ஓரிடத்திலும் ணாகன் என்ற சொல் வேறிடத்திலும் மட்டுமே காணப்படுகின்றன. ஆனால் இங்கு 20 தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களில் 25 இடங்களில் வேள் என்ற சொல் காணப்படுகின்றமை சிறப்புமிக்க ஒரு அம்சமாகும். அத்துடன் ஆதி இரும்புக் காலப் பண்பாடான பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களின் ஒரு பகுதியினராக நாகர் விளங்கியிருந்தனர்."[11]

**முடிவுரை**

நாகர் தொடர்பான செய்திகள் காணப்படுகின்ற பிராமிக் கல்வெட்டுக்கள் கிடைக்கும் இடங்களில் பொதுவாக நாக வழிபாட்டுச் சின்னங்கள் கிடைக்கின்றன. குசலான்மலையில் நாக சிற்பம் ஒன்று காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதேபோன்று அண்மையில் பேராசிரியர்.பத்மநாதன் அவர்களால் கண்டறியப்பட்டுள்ள வந்தாறுமூலை நீர்முகப் பிள்ளையார் கோயிலிலும் நாகர் பற்றிய செய்தி காணப்படுகின்ற அதேநேரம் அங்கும் நாக சிற்பம் ஒன்று காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இது நாகர்கள் முற்காலத்தில் நாக வழிபாட்டைப் பேணியிருந்தனர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

நாகர் எனும் பிரிவினர் உள்ளூர் நிர்வாகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தவர்களான பருமக, கமிக எனும் பதவியையும் வகித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையைப் போன்று நாகர் மட்டக்களப்பின் பூர்வ குடிகளாவர். பௌத்த சமயத் துறவிகளும் நாக என்ற பெயருடையோராக இருந்துள்ளனர். இவர்கள் பிற்காலத்தில் ஈழத்தின் பல்வேறு பாகங்களிலும் வேற்றின மக்களோடு கலப்புற்றனர். அநுராதபுர அரசரிற் பலர் நாகர் என்பது குறிப்பிடத்தக்கது.அனுராதபுர இராசதானி நிலைபெற்றிருந்த காலத்திலேயே மட்டக்களப்பு தேசம் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலேயே நாகர்களால் ஆட்சி செய்யப்பட்ட பிராந்தியமாக இருந்தது என்பது தெளிவுபெறுகின்றது.

நாகர் ஒரு இனக்குழுவாக வாழ்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. நாகரின் பெயரால் மட்டக்களப்பின் பல பகுதிகள் நாகர்முனை, நாகர்பொக்கனை, நாகன்சாலை என அழைக்கப்பட்டமையைக் கொண்டு நோக்குகின்றபோது இம்மக்கள் புராதன காலத்தில் செல்வாக்குடையவொரு பிரிவினராக விளங்கியிருந்தனர் எனத் துணியலாம். இங்குள்ள பிராமிக் கல்வெட்டுக்களின் மூலம் ஆரம்பத்தில் நாக வழிபாட்டைப் பின்பற்றிய மக்கள் பிற்காலத்தில் பௌத்த, இந்து சமயங்களுக்கு மாறியதை அடையாளங் காணமுடிகின்றது.

நாகர் தமிழ் மொழி பற்றிய அறிவுடையோராய் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் அண்மைய கண்டுபிடிப்புகளின் மூலம் தமிழ் மொழி பேசிய நாகர் கி.மு மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலம் முதலாக கிழக்கிலங்கையில் குடியிருப்புகளை ஏற்படுத்தி அவற்றைச் சிற்றரசுகளாக உருவாக்கினர் என்பதும், சிற்றரசர்களான நாகர் வேள் என்ற பட்டத்தைப் பெற்றிருந்தனர் எனவும் கொள்ள முடிகின்றது. அத்துடன் ஆதி இரும்புக் காலப் பண்பாடான பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களின் ஒரு பகுதியினராக நாகர் விளங்கியிருந்தனர்.

**உசாத்துணை**

[11] பத்மநாதன்.சி,(2015),"மட்டக்களப்பில் நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள், மொழிதல், தொகுதி-2: எண்- 01, சுதந்திர ஆய்வு வட்டம், பக்: 17-27

1. Mahavamsa
2. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், பதிப்பு: சா.இ.கமலநாதன், கமலா கமலநாதன், குமரன் புத்தக இல்லம், 2005
3. சிற்றம்பலம்.சி.க., (1993), யாழ்ப்பாணம்- தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு
4. சிற்றம்பலம்.சி.க., (1996),ஈழத்து இந்து சமய வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு
5. தங்கேஸ்வரி.க.,(2007),கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு,மணிமேகலைப் பிரசுரம்
6. பத்மநாதன்.சி., (2006),இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு
7. பத்மநாதன்.சி,(2015),"மட்டக்களப்பில் நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள், மொழிதல், தொகுதி-2: எண்- 01, சுதந்திர ஆய்வு வட்டம், பக்: 17-27
8. பரமு புஸ்பரட்ணம்,(2003),பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும், கொழும்புத் தமிழ்ச் சங்கம்
9. பரமுபுஸ்பரட்ணம், (2006), இலங்கைத் தமிழரும் நாக நாட்டு அரச மரபும், நியு செஞ்சூரி புக் ஹவுஸ்
10. Paranavitana.S., (1970), Inscription of Ceylon, vol-01, Colombo
11. www.puthinappalakai.com